1. திரு.முருகேசன், அம்மன்பேட்டை, மேலூர்:

தனது பெயர் முருகேசன் வெள்ளனூர், பஞ்சாயத்து, அம்மன்பேட்டையில் வசித்து வருவதாகவும், சுமார் 10 வருட காலமாக கிரசரில் வேலை பார்த்து கொண்டிருப்பதாகவும் கூறினார். கிரசரில் வேலை செய்து வருவதினால் தான் தனது வாழ்வாதாரம் நடப்பதாகவும், அவரது மகன்களுக்காக சில உதவிகள் எல்லாம் கிரசர் உரிமையாளர் செய்து இருப்பதாக கூறினார். தன்னுடைய வாழ்வாதாரம் கிரசரில் வேலை பார்த்தால் தான் நன்றாக இருக்கும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

2. திரு. பழனிக்குமார், ஊராட்சி மன்றத் துணைத்தலைவர், மேலூர்:

இந்த கல்குவாரியினால் இந்த மேலூர் ஊராட்சி நிறைய வளர்ச்சியடைந்து இருக்கின்றது. இந்த கருத்து கேட்பு கூட்டம் நடக்கும் இந்த திருமண மண்டபமே அந்த கல்குவாரி உரிமையாளரால் தான் கட்டப்பட்டது என்று கூறினார். இதே போன்று பக்கத்து கிராமம் அம்மன்பேட்டையிலும் இதே மாதிரி மண்டபம் கட்டப்பட்டுள்ளதாகவும், நிறைய சாலை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். எனவே அரசாங்கம் இந்த கல்குவாரியை குத்தகைக்கு விட்டு அரசின் சட்டதிட்ட விதிகளின் படி அந்த கல்குவாரியினை நடத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

3. திரு.பாண்டியன், மேலூர்:

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொதுமக்கள் கருத்து கேட்பு நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் அரசு அதிகாரிகள் அனைவரையும் மேலூர் கிராம பொதுமக்கள் மற்றும் கிராம ஊராட்சியின் சார்பாக அன்போடு வரவேற்பதாக கூறினார். இந்த ஆரோக்கியராஜ் கல்குவாரி மக்கள் கருத்து கேட்பு கூட்ட நிகழ்வில், தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்ய விரும்புவதாக தெரிவித்தார். இந்த கல்குவாரியில் இருந்து வரக்கூடிய நிதியானது இந்த ஊராட்சியின் வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கிறது. ஆனால் அதே சமயம் இந்த கல்குவாரியில் பெரிய அதிக அதிக அதிர்வலைகளை ஏற்படுத்தக்கூடிய வெடிகளை வெடிக்க கூடாத வகையில் அரசு சட்ட திட்டங்களின்படி அனுமதிக்கப்பட்ட வெடிகள் மட்டும் வெடிக்குமாறு அனுமதி வழங்க வேண்டுமென கூறினார். அதே போன்று நிறைய கல்குவாரிகள் முடிவடைந்துள்ளதால் வெடிப்பதையும், கல் உடைப்பதையும் நிறுத்தியுள்ளனர். எல்லாமே திறந்தநிலையில்

உள்ளது. அங்கு ஆடு, மாடுகள் எல்லாம் சென்றால் தவறி கீழே விழுந்துவிடும் நிலை இருக்கிறது. அதனால் அதற்கு ஏதாவது பாதுகாப்பு வழங்கவேண்டும் என கேட்டுக் கொண்டார். அதே போன்று போர் போட்டு வெடி வைக்கிறார்கள் அதனால் நிறைய வீடுகள் பாதிக்கப்படுகிறது. அனைவரும் கஷ்டப் பட்டு வெளிநாட்டிற்கு சென்று உழைத்து வீடுகட்டி இருக்கிறார்கள். இது போன்று போர் போட்டு வெடி வைப்பதால் வீடெல்லாம் பாதிப்படைகிறது. எனவே, அந்த அதிர்வு வெடி எல்லாம் வைக்ககூடாது அதே மாதிரி இந்த கல்குவாரிகள் ஊராட்சியின் வளர்ச்சிக்கு பெரும்பங்கு அளித்துள்ளது. அதனால், அரசு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கலாம் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

**4. திரு. எம். சி. மனோகரன், சமூக ஆர்வலர்:**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக நடைபெறுகின்ற கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்து இருக்கின்ற உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அம்மா அவர்களே, உயர்திரு குளத்தூர் வட்டச்சியர் ஐயா அவர்களே, மற்றும் A.D.பஞ்சாயத்து அவர்களே, வருகை புரிந்திருக்கின்ற துணை வட்டாட்சியர் அவர்களே, இங்கே வருகை புரிந்துள்ள அனைத்து அலுவலர்களே மற்றும் பொது மக்களே இந்தக் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்துள்ள ஏனைய வெளி மாநில மற்றும் வெளி மாவட்ட நண்பர்களே மற்றும் எங்களுடைய கிராமத்தை சார்ந்தவர்களே உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய காலை வணக்கத்தை தெரிவித்து கொள்கின்றேன். தனது பெயர் எம் சி மனோகரன், சமூக ஆர்வலராக இருக்கின்றேன். அது மட்டும் இல்லாமல் ஐந்து முறை எங்கள் குடும்பத்தில் இருந்து இந்த ஊராட்சி மன்றத்திற்கு வார்டு உறுப்பினராக இருப்பதாக தெரிவித்தார். அது மட்டுமில்லாமல் 1982ல் இருந்து மக்களுக்காக தனது சேவையினை செய்து கொண்டிருப்பதாக கூறினார். எனது உடையை கவனித்தால் தெரியும். புதுக்கோட்டை மாவட்டம் அளவில் தான் பேரிடர் மேலாண்மையில் சிறப்பாக வேலை பார்த்துக் கொண்டு இருப்பதாக தெரிவித்தார். இந்த கருத்து கேட்பு கூட்டத்திற்கு முன்பு நடந்த கூட்டத்திற்கும் நான் வந்திருக்கிறேன். அந்த கூட்டத்திற்கு எங்களுடைய முன்னாள் மாவட்ட ஆட்சியர் எங்கள் மனதில் இருந்த கவிதா ராமு அம்மா, இரண்டு முறை வந்திருக்கின்றார்கள். அதே போன்று முன்னாள் கோட்டாட்சியர் எங்கள் மனதோடு இருந்த அன்போடும் பாசத்தோடும் இருந்த ஐயா குழந்தைசாமி வந்திருக்கின்றார்கள். இங்கு இதற்கு முன்பு இரண்டு முறை கருத்து கேட்பு கூட்டம் நடந்துள்ளது. நான் ஊராட்சி மன்றத்தின் சார்பில் தான் முதலில் பேசினேன். இந்த ஊராட்சி மன்றம் புதுக்கோட்டை மாவட்டத்திலே மிகவும் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது என்று கூறினால்

அதற்கு முதற் காரணம் இந்த கல்குவாரிகள் தான். இந்த கல்குவாரியை வைத்துத்தான் இங்கு அத்தனை திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு இருக்கின்றது. இதுவும் நம்முடைய ஊரு தான். இங்கு வந்திருக்கின்ற ஆரோக்கியராஜ்-ம் நம்முடைய வட்டத்தில் தான் இருக்கிறார். அதாவது பொது மக்களுக்கு ஒரு வாழ்வாதாரம் வேண்டும், கிராம வளர்ச்சிக்கு ஒரு நிதி வேண்டும், அந்த வகையில் தான் இதை சொல்லிக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். இங்கே இருக்கின்ற இந்த திருமண மண்டபம் கூட இந்த கல்குவாரி நிதியில் கட்டப்பட்ட மண்டபம் தான். இதற்கு எதிரே உள்ள குளமும் கல்குவாரி நிதியில் கட்டப்பட்டது தான். இதுபோன்று நிறைய பணிகள் கல்குவாரி நிதியில் எங்களுடைய ஊராட்சி மன்றத்தில் கிட்டத்தட்ட ஐந்து கோடிக்கு மிக சிறப்பான பணிகள் செய்யப்பட்டு உள்ளது. சாலைகள் அமைக்கப்பட்டிருக்கிறது, இது போன்ற எண்ணற்ற வகையிலே சொல்லிக் கொண்டு போகலாம் என்று தெரிவித்தார். அந்த வகையில் இன்றைக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக நடத்தப்படும் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு என்னுடைய முழு ஒத்துழைப்பு உண்டு. ஏன் என்று கேட்டால் நான் உள்ளூர்காரன், வெளியூர்காரன் கிடையாது. நான் பேசிட்டு போய்விடலாம் ஆனால், நாளைக்கு கேட்பார்கள், நீ என்ன சொன்னேன்னு என்று கேட்பார்கள். அந்த வகையில் எங்களுடைய ஊர் வளர்ச்சிக்காகவும், எங்களுடைய பஞ்சாயத்து ஊராட்சி மன்றம் வளர்ச்சிக்காகவும், இந்த கல்குவாரி செயல்பட்டால் தான் நல்லது. இங்கு இருக்கும் பொதுமக்களும் வளர்ச்சி அடைவார்கள் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

5. திரு. பழனிக்குமார், நக்கீரர்வயல்:

எங்கள் ஊரில் கல்குவாரிகள் அதிகமாக உள்ளது, அதற்காக நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இருந்தபொழுதும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த நிறுவனங்களையும் மேம்படுத்த வேண்டும். எங்களுக்கு என்ன உதவி வேண்டுமோ, அதை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். இங்கு இராட்சத வெடிகள் வைத்து எங்கள் வீடு பாதிக்கப்படுகின்றது. நாங்களோ விவசாயிகள். நாங்கள் உங்களிடம் தான் குறை சொல்ல முடியும். கல்குவாரி நிறுவனத்திடம் கூறினால் அவர்கள் ரூபாய் ஐயாயிரம் தருகிறோம், பத்தாயிரம் தருகிறோம் என்று கூறுகிறார்கள். நான் உங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன், எங்களுடைய வாழ்வாதாரத்தை நீங்கள் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும். இங்கு அதிகமாக போர் போட்டு வெடி வைக்கப்படுவதால், எங்கள் வீடு அதிகமாக பாதிக்கப்படுகின்றது. மலையடியிலிருந்து எத்தனை மீட்டர் இருக்கின்றது என்று

சரிபார்த்து நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்ற தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதாக தனது கருத்தினை தெரிவித்தார்.

6. திரு. காமராஜ், மேலூர்:

ஆரோக்கியராஜ் கல்குவாரியில் இருந்து நமக்கு நிறைய பலன்கள் இருக்கின்றது. நமக்கு தார் ரோடு வசதியிலிருந்து, மண்டபம் வரை எல்லாம் கட்டிக் கொடுக்கிறார்கள். அரசாங்கத்தில் இருந்து நமக்கு நிதி வழங்குகிறார்களோ இல்லையோ கல்குவாரியில் இருந்து நமக்கு நிதி வருவதாக தெரிவித்தார். அதனால், மக்கள் வந்து அதிகமாக அங்கு வேலை பார்க்கிறார்கள். நமது வேலையாட்கள் கூட கஷ்டப்பட்டு கொண்டுதான் இருக்கின்றார்கள். அதனால், தாங்கள் அனுமதி அளிக்க வேண்டும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

7. திரு.ரகுபதி, மேலூர்:

அனைவரும் சொல்வதைப் போன்று அதிகமான சத்தத்துடன் கூடிய வெடி வைக்காமலும், அந்த வெடியில் வரக்கூடிய நச்சு வாயுவானது ஒரு அரை மணி நேரத்திற்கு அதே இடத்தில் சுற்றுவதினால் அதிகமாக விஷம் உள்ள காற்றாக மாறுவதாகவும் குறிப்பிட்டார். மேலும், இங்கு கல்குவாரி இருப்பதனால் அதிகமான கிரஷர்கள் இங்கு இருக்கிறது. கிரஷரில் இருந்து வரக்கூடிய தூசியானது மேலே வந்து படிவதால் கால்நடைகள் எல்லாம் பாதிப்படைகிறது. அதனால், தூசியை மேற்கொண்டு பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்குமாறு கூறி தனது கருத்தினை பதிவு செய்தார்

8. திருமதி.லெட்சுமி, மேலூர்:

10, 12 வருடங்களாக கல்குவாரியில் வேலை பார்த்துகொண்டு இருக்கிறோம். கல்குவாரி இல்லை என்றால் எங்களுக்கு வாழ்வாதாரத்துக்கு வேறு வழியில்லை என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

9. திரு.மணிகண்டன், காமராஜபுரம், புதுக்கோட்டை:

அனைவருக்கும் வணக்கம். இன்றைக்கு ஆரோக்கியராஜ் உடைக்கல் குவாரி, குளத்தூர் வட்டம், மேலூர் கிராமம், புல எண் 210/7A, அதில் 1.68 ஹெக்டேருக்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் எனது கருத்தினை முன்வைக்கின்றேன். இந்த கல்குவாரியின் தொடக்கமே பொதுமக்கள் பயன்படுத்தும் சாலைக்கு அருகிலேயே உள்ளது. இந்த சாலை கல்குவாரியின் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இது

சிறு கனிம சலுகை விதிகளின்படி மிகப்பெரிய தவறு அது அனுமதிக்க கூடாத ஒன்று. அதனால், இந்த கல்குவாரி அனுமதிக்க தகுந்தது அல்ல என்று தனது முதல் கருத்தினை முன் வைப்பதாக கூறினார். அடுத்ததாக இதன் பக்கத்தில் நீர்நிலைகள் இருப்பதினை அவர்கள் தவறான அளவீடுகள் கொண்டு அளந்திருக்கிறார்கள். அந்த கல்குவாரியின் எல்லையில் இருந்து அந்த நீர்நிலைகள் இருப்பதை அளக்க வேண்டும், ஊர் குடியிருப்புகள் இருப்பதை கல்குவாரி எல்லையில் இருந்து அளக்க வேண்டும். இவர்களுடைய வரைபடத்தின்படி இவைகள், கல்குவாரியின் நடுப்பகுதியில் இருந்து அளக்கப்பட்டு இருக்கின்றது. அதன் அடிப்படையில் அவர்கள் 360 மீட்டர் தொலைவில் நீர்நிலைகள் இருப்பதாக கூறி இருக்கின்றார்கள். ஆனால், கல்குவாரியினுடைய எல்லையில் இருந்து அளந்தால் அளவிற்கு உட்பட்டு அது 300 மீட்டர் அளவிற்கு உள்ளேயே வரும். எனவே, இது அளவுகோலின் படி இது தவறு என்று சுட்டிக்காட்டி இது அனுமதிக்கத்தக்க தகுந்தது அல்ல என்று தெரிவித்துக்கொண்டார். இங்கு பேசுகின்ற பொழுது, பல்வேறு கருத்துக்கள் இந்த கல்குவாரியை சுற்றியுள்ள மக்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புவதாக தெரிவித்தார். இவர்கள் தொடர்ச்சியாக வைத்த குற்றச்சாட்டுகள் எல்லாம் என்னவென்றால் ஒன்று சத்தமான அதிக சத்தம் எழுப்பக்கூடிய வெடிகளை பயன்படுத்துகிறார்கள். இரண்டாவது, இதனால் ஏற்படுத்தக்கூடிய புகை அரை மணி நேரத்திற்கு மேலாக பரவுகின்றது என்று தெரிவித்திருக்கிறார்கள். மூன்றாவது, வீடுகள் அதிர்வடைகின்றது என்று தெரிவித்து இருக்கின்றார்கள். நான்காவது, இந்த வாகனங்கள் எல்லாம் அதிகமாக செல்வதினால், கிரசர் அதிகமாக இருப்பதினால், தூசி பரவுகின்றது அதனால் மிகப்பெரிய தொல்லைகள் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார். இவை நான்குமே அவர்கள் எந்த காரணத்தை சொல்லி அனுமதி பெற்றார்களோ அந்த அனுமதியை மீறி அவர்கள் தவறாக, சட்டத்துக்கு புறம்பாக விதிகளை மீறி செயல்பட்டுள்ளார்கள் என்பதற்கான சாட்சிகளாக இங்கே இவர்களுடைய குரல்கள் இருந்திருக்கின்றது என்று குற்றம் சாட்டினார். நாணல் வெடிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது விதி. அதனை ஒப்புக்கொண்டு, இவர்கள் அனுமதி பெற்று விட்டு இங்கே இவர்கள் நாணல் வெடிகளை பயன்படுத்தாமல், அபாயம் விளைவிக்கக் கூடிய வெடிகளை பயன்படுத்தி உள்ளார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. இரண்டாவது, இந்தப் பகுதியில் முடிவடைந்த கல்குவாரிகள் எதுவுமே அதன் சுற்றுப்புறத்தில் எந்த வேலியும் அமைக்கப்படாமல் திறந்திருப்பதாக தெரிவிக்கின்றார்கள். அதனால், ஆடு, மாடுகள் விழுந்து பாதிப்படைவதாக தெரிவிக்கின்றார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய செய்தி ஆகும் என்று குறிப்பிட்டார்.

உடனடியாக, அவர்கள் மூடி முத்திரையிடப்பட்டு இங்கே பயன்பாடு அற்று மூடப்பட்ட கல்குவாரிகள் அனைத்திற்கும் அவர்களின் செலவிலேயே வேலி அமைக்கப்பட வேண்டும் என கூறினார். கம்பி வேலி அமைத்து விட்டோம் என்றெல்லாம் தெரிவித்து போலியாக தங்களிடம் கணக்கு காட்டி இருப்பார்கள். அதனை கண்டறிந்து ஆய்வு செய்து மூடப்பட்ட கல்குவாரிகளில் உடனடியாக கம்பி வேலி அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அடுத்தபடியாக, இந்த நாணல் வெடிகளை தான் கல்குவாரியில் பயன்படுத்துகிறார்கள் என்ற உத்தரவாதத்தை இங்கு இருக்கக்கூடிய கிராம நிர்வாக அதிகாரிகள் முதற்கொண்டு மாவட்ட ஆட்சியர் வரை தான் அதற்கு பொறுப்பு, எஸ்.ஐ முதற்கொண்டு எஸ்.பி வரைக்கும் தான் இதற்கு பொறுப்பு இங்கு காவல்துறையும் வருவாய்த் துறையும் இணைந்து குழுக்கள் அமைத்து இங்கு இந்த வெடிகளை பயன்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நன்றி கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

**10. திரு.சதீஷ், ஆந்திர மாநிலம்:**

சபைக்கு வணக்கம். மேடைக்கு வந்த அனைவருக்கும் வணக்கம். உங்கள் ஆச்சார விவரங்களை கலாச்சாரம், சம்பிரதாயங்களை, காப்பாற்றிக் கொண்டு இருக்கும் உங்கள் மனோபாவங்களை மதிக்கிறேன். உங்கள் அபிப்பிராயங்களுடன் நியாயமான பிரச்சனைகளை ஒப்புக்கொண்டு ஒரு மனதாக ஒப்புக்கொள்கிறேன். உங்கள் பிரச்சனைகளை உடனடியாக தீர்த்து வைக்கும் படி அரசாங்கம் இந்த ஊரினை தத்தெடுத்து கொண்டு நிலையான வளர்ச்சியை உருவாக்குவதற்கு அதிகமான நிதியை உடனே ஒதுக்க வேண்டும், வேலை வாய்ப்பினை விரைவாக ஏற்பாடு செய்ய வேண்டும், அருகாமையில் உள்ளவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டி கொடுக்க வேண்டும் என்று அரசாங்க உயர் அதிகாரிகளை மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார். இந்த ஊர், நீர் வளத்தோடும் பசுமையோடும் நிலையாக இருக்க வேண்டும் என்று சுற்றுசூழல் காப்பாற்று செயலாளராக கூறுவதாக தெரிவித்தார். இந்த கல்குவாரி உரிமையாளர் அவர்கள் மரங்களை வளர்த்து அவற்றை பாதுகாக்க வேண்டும் எனவும், இந்த கல்குவாரி உரிமையாளர் அவர்களுக்கு மிகுந்த கட்டுப்பாட்டினை விதித்து அவர்களுக்கு சுற்றுசூழல் அனுமதியை வழங்க வேண்டும் என்று அரசாங்க உயர் அதிகாரிகளுக்கு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்வதாக தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

11.திரு. முகிலன், ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம்:

சென்னை உயர் நீதிமன்றமும், டெல்லி உச்ச நீதிமன்றமும் நியமித்த மரியாதைக்குரிய சகாயம் ஐஏஎஸ் அவர்களுடைய கிரானைட் முறைக்கேடு ஆய்வில் அவரோடு ஓராண்டு காலம் பயணித்ததாக கூறினார். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியமும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து நடத்தும் குளத்தூர் வட்டம், மேலூர் கிராமம், ஆரோக்கியராஜ் கல்குவாரி கருத்து கேட்பு கூட்டத்தின் தலைவர், மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், மற்றும் ஏனைய அரசுத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கும், பத்திரிக்கை நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும், கல்குவாரி உரிமையாளர்களுக்கும், கல்குவாரியில் வேலை பார்ப்பவர்களுக்கும், கல்குவாரிக்கு ஆதரவாக ஆந்திராவில் இருந்து தமிழ் தெரியாவிட்டாலும் தெலுங்கில் பேச வந்திருப்பவர்களுக்கும் என்னுடைய வணக்கம். இந்த கருத்து கேட்பு கூட்டம் ஆரோக்கியராஜ் கல்குவாரி 1.68.0 ஹெக்டேர் சுமார் 6 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த கல்குவாரி புதியதாக இயங்குவதற்கு அனுமதி கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இந்த கல்குவாரி சட்டப்படி இயங்குவதற்கு தகுதி உள்ளதா என்று பார்த்தால், இங்கே எனக்கு முன்னால் பேசிய இந்தத் திட்டத்தின் வடிவமைப்பாளர் அவர்கள் இந்த கல்குவாரி இயங்கினால் மண் மாசு, ஒலி மாசு, காற்று மாசு, பல்லுயிர்சூழல் மாசு, சமூக பொருளதார பாதிப்பு எல்லாம் ஏற்படும் என்று தெரிவிப்பதாகவும் அதை எவ்வாறு சரி செய்யலாம் என்ற அறிக்கையை அங்கே படத்தில் திரையிட்டு காண்பித்ததாகவும் கூறினார். கல்குவாரி இயங்கினால் இத்தனை மாசு ஏற்படும். இந்தமாசு ஏற்படும் பொழுது கட்டுப்படுத்த முடியுமா அவர்கள் சொன்ன அடிப்படையில் அதை சரி செய்ய முடியுமா என்பதை பற்றி பேச வந்துள்ளதாக தெரிவித்தார். முதலில் கல்குவாரி அமைய வேண்டும் என்றால் அதை பற்றி அரசு விதிகள் Criteria என்று சொல்லுவார்கள் அதாவது சிறு கனிம சலுகை விதிகள் 1959- பிரிவு 36-ன் படி அரசு விதிகளுக்கு உட்பட்டு இந்த குவாரி இருக்கிறதா என்று பார்த்தால், 300 மீட்டர் தொலைவிற்குள் வீடுகள், வீட்டு மனைகள், நிரந்தர கட்டுமானங்கள், ஊர்நத்தம் ஆகியவை இருக்கக் கூடாது. ஆனால் அவ்வாறு இருக்கிறதா இல்லையா என்று எங்களுக்கு தெரியவில்லை. காரணம், இந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் கிராம வரைபடமே இணைக்கப்படவில்லை என்று கூறினார். முதலில் அடிப்படையானது கிராம வரைபடமும் புலம் அமைகின்ற இடத்தை சுற்றி 300 மீட்டர், 500 மீட்டர் இடத்தை காட்டுகின்ற கிராம நிர்வாக அலுவலர் அவர்களின் கையொப்பத்தோடு கூடிய வரைபடம் முக்கியமானது. இந்த EIA அறிக்கையில் அந்த கிராம வரைபடம் இணைக்கப்படவில்லை என்று கூறினார். வரைபடம் வைக்கவில்லை என்றால் எப்படி

தெரிந்து கொள்ள முடியும் என்று கேள்வி எழுப்பினார். இது வெளிப்படையாக நிர்வாகத்தின் அடிப்படையில் நடைபெறுகின்ற கூட்டம். தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவின் அடிப்படையில் ஒரு கல்குவாரி எத்தனை ஏக்கர் வேண்டுமென்றாலும் இருக்கலாம் கல்குவாரியை சுற்றி 500 மீட்டருக்குள் மற்ற கல்குவாரியின் பகுதியை சேர்த்து 12 ½ ஏக்கர் இருந்தால் கருத்து கேட்பு கூட்டம் நடத்த வேண்டும் என்ற அடிப்படையில் முதன் முதலில் இந்த கூட்டம் மேலூர் கிராமத்தில் நடத்தப்படுகிறது. ஆனால், இந்த ஆவணத்தையே மறைத்து, கிராம வரைபடத்தையே மறைத்து, இங்கே இந்த கூட்டம் நடத்தினால், உண்மை எப்படி சொல்ல முடியும் இங்கு வீடுகள் இருப்பதை எப்படி தெரிந்து கொள்ள முடியும் என்று கேள்வி எழுப்பினார். நீங்கள் கிராம வரைபடத்தை வைத்திருந்தால் எல்லாமே குறிப்பிட்டு இருக்கும். அதில் வீடுகள், வீட்டுமனைகள், ஓடைகள், என எல்லாமே குறிப்பிட்டு இருக்கும் என்று தெரிவித்தார். இது மதிப்பிற்குரிய வருவாய் கோட்டாட்சியர் அம்மா அவர்களுக்கு தெளிவாக தெரியும். ஆனால், இதில் கிராம வரைபடம் வைக்கவில்லையே, எப்படி நான் கூற முடியும் என்று கேள்வி எழுப்பினர். உண்மையான ஆவணங்களை காட்டாமல் இந்தக் கல்குவாரியினுடைய கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்படுவதால் இது சட்டப்படி சரியானது அல்ல என்று கூறினார். இந்த கல்குவாரினுடைய கருத்துக்கேற்ப கூட்டத்தை ரத்து செய்துவிட்டு மீண்டும் நடத்த வேண்டும் என்று கூறினார். அடுத்ததாக புலம் அமையக்கூடிய மேலூர் கிராமம் 210/7A இதுதான். இந்தப் படம் நேற்று 25 தேதி மாலை 2 மணியளவில் எடுத்த படம் என்று காண்பித்தார். ஒரு கல்குவாரி அமைந்தால் அதை சுற்றி என்னென்ன புலம் இருக்கிறது என்று இருக்கும் அதனை சுற்றியுள்ள புலங்கள் காட்டப்பட்டிருக்க வேண்டும். இந்த படத்தில் எங்கேயாவது இருக்கிறதா பாருங்கள் என காண்பித்து கேள்வி எழுப்பினார். இங்கு 210 புல எண் மட்டும் இருக்கிறது. இந்த 210 புல எண்ணிற்கு கிழக்குபுறம் என்ன இருக்கிறது, மேற்குபுறம் என்ன இருக்கிறது, வடபுறம் என்ன இருக்கிறது, தென்புறம் என்ன இருக்கிறது என எதுவுமே கிடையாது என்று குறிப்பிட்டார். படித்தவன் சூதுவாது செய்தால் போவான் போவான் ஐயோன்னு போவான் என்று கூறினார். நாங்கள் கேட்பது, குவாரி அமைவது அந்த பிரச்சனை எல்லாம் வேறு. இந்த வரைபடம் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கக்கூடிய சர்வே அலுவலர்கள் தான் போட்டு உள்ளார்கள், இதில் எதுவுமே இல்லை இதில் எப்படி பார்க்க முடியும் என்று கேள்வி எழுப்பினார். இந்த இடத்தை சுற்றி இருக்ககூடியது என்ன புல எண் என்பதை FMB எடுத்து எப்படி பார்க்க முடியும் என்றும் கிராம வரைபடம் போட மாட்டீங்க, போடக்கூடிய புல வரைபடமும் இவ்வளவு முறைகேடாக போடுகிறீர்கள் அப்படி என்றால் இந்த நாடு எங்கு சென்று கொண்டிருக்கிறது. உண்மையை, மறைத்து பொய்யான ஆவணங்களை கொடுத்து,

இந்த கருத்துக்கேற்ப கூட்டத்தை நடத்தினால் இந்த நாடு எந்த நிலையில் உள்ளது என்று கேள்வி எழுப்பினார். இவ்வளவு வெளிப்படையான நிலையில் அரசாங்கம் இருந்தும் நீங்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்துள்ள படத்தில் எதுவுமே கிடையாது என்று வருத்தம் தெரிவித்தார். இந்த மாவட்டத்தில் இரண்டு அமைச்சர்கள் உள்ளார்கள். இவ்வளவு மோசடியான ஆவணங்களை வைத்து இந்த கருத்து கேட்புக் கூட்டத்தை நடத்தினால் இதில் என்ன உண்மை இருக்கும். இந்த கூட்டத்திற்கு யாருமே வர வேண்டாம் என்று கூறி நீங்களே இதை முடித்து விடலாமே என்று கூறினார். இந்த குற்றத்தினை செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டார். எங்களுக்கு கிராம வரைபடம் இல்லை பல விஷயங்கள் கூற முடியவில்லை, இருந்தாலும் கூட தெளிவாக சிறு கனிம சலுகை விதிகள் 1959-பிரிவு 36-ல் பொதுசாலைகளில் இருந்து 50 மீட்டர் தள்ளி தான் கல்குவாரி பணி செய்ய வேண்டும் என்று விதி 36 கூறுகிறது என்று கூறினார். பொதுச் சாலையின் வரையாக என்ன சொல்கிறார்கள் என்றால் பொதுச்சாலை என்பது அடிக்கடி பயன்படுத்துவதால் ஏற்படும் உறுதியான பாதை, செயற்கையாக போடப்பட்டுள்ள சாலை, அதாவது Artificially Surfaced and distinct from the track resulting from the repeater அதாவது, மண்பாதை அல்லாமல் மெட்டல் போட்டு தார் சாலையாக இருந்தால் அதிலிருந்து 50 மீட்டர் தள்ளி தான் கல்குவாரி இயங்க வேண்டும் என்பது விதி என்று கூறினார். இந்த நிறுவனம் சமர்ப்பித்த படம் இது என்று பக்கம் 285-ஐ காண்பித்து இந்த நிறுவனம் சமர்ப்பித்து இருக்கும் படத்தில் இந்த ஆரோக்கியராஜ் கல்குவாரி சித்தன்னவாசல் சாலையை ஒட்டி அமைந்துள்ளது அந்த சாலையில் இருந்து 25 மீட்டர் தொலைவில் தான் இந்த கல்குவாரி உள்ளதாகவும், இவ்வாறு 25 மீட்டர் தான் இருக்கும் பட்சத்தில், பொதுச் சாலையில் இருந்து 50 மீட்டர்க்குள் கல்குவாரி இருந்தால் அந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க கூடாது. இதை நான் சொல்லவில்லை, முகிலன் சொன்னால் பொய்யாக கூட இருக்கலாம். இந்த குவாரியினுடைய திட்ட வடிவமைப்பாளரே கூறியிருப்பதாக தெரிவித்தார். 25-வது மீட்டரில் குவாரி பணி செய்யப் போவதாக படம் போட்டு காண்பித்துள்ளதாக குறிப்பிட்டார். ஆகவே, சட்டப்படி இயங்க தகுதி அற்றது என்று கூறினார். அதேபோல் இந்த சாலை இருந்தால் 50 மீட்டர் விடவேண்டும் என்பது பற்றி குறிப்பானையில் ஏதும் இல்லை. இந்த இடத்தை கிராம நிர்வாக அலுவலர் பார்த்து சான்று கொடுக்கிறார், தாசில்தார் நேரடியாக வந்து பார்க்கிறார், ஏ டி மைன்ஸ் வந்து பார்க்கிறார், கோட்டாட்சியரும் வந்து பார்க்கிறார், உங்களுக்கு முன்னால் இருந்த RDO பார்த்திருப்பார். அவர்களெல்லாம் என்ன தான் செய்தார்கள் என்று கேள்வி எழுப்பினர். சட்டப்படி அமல்படுத்த வேண்டிய அதிகாரிகளே இப்படி சட்டத்திற்கு விரோதமாக

நடந்தால் நாங்கள் எங்கே தான் போய் சொல்வது என்று கூறினார். இப்படி ஒரு சாலை இருப்பதே யாரும் கூறவில்லை. தென்புறத்து எல்லையில் சித்தனவாசல் சாலை செல்வதாகவும், அந்த சாலையில் இருந்து இவ்வளவு மீட்டர் இடைவெளிவிட வேண்டும் என்று குறிப்பாணை கொடுத்த ஏ டி மைன்ஸ் கூறவில்லை, புலத்தை ஆய்வு செய்து அறிக்கை கொடுத்த யாரும் கூறவில்லை என்றால் என்ன இருக்கிறது என்று கேள்வி எழுப்பினார். அதேபோன்று கருத்து கேட்டுக் கூட்டத்தில் 45 வகையான ஆவணங்களை இணைக்க வேண்டும் அதாவது VAO சான்று கொடுத்து முதல் A1 நோட்டீஸ் கொடுத்து அதன் அடிப்படையில் மக்கள் கருத்து தெரிவித்தது அதனுடைய சான்று, அதனுடைய வருவாய் ஆய்வாளர் சான்று, கோட்டாட்சியர், புல தணிக்கை அறிக்கை செய்த வட்டாட்சியர் மற்றும் ஏடி மைன்ஸ் சான்று மற்றும் மற்ற துறைகள் சார்ந்த ஆவணங்கள் எதுவுமே கிடையாது என்று கூறினார். VAO கொடுக்க வேண்டிய 300 மற்றும் 500 மீட்டர் சுற்றளவு சான்று, கிராம வரைபடம் கூட இதில் இல்லை என்று கூறினார். இப்படியான முறையில், உண்மைகளை மறைத்து திட்டமிட்டு இங்கு உள்ளவர்களுக்கெல்லாம் என்ன தெரியும் என்ற நோக்கத்தை தவிர வேறு என்ன நோக்கம் இருக்க போகிறது என்று எனக்கு தெரியவில்லை என்று கூறினார். இப்படி உண்மைகளை மறைத்து தான் இந்த கூட்டம் நடத்தப்படுகிறது என்று கூறினார். அடுத்ததாக இந்த கல்குவாரியை சுற்றி கண்மாய் 356 மீட்டர் தொலைவில் இருப்பதாக இந்த வரைபடத்தில் தெரிவித்துள்ளார்கள். நாங்கள் GOOGLE-ல் பார்க்கும் பொழுது தூரம் குறைவாக இருக்கின்றது. அதனால் இவர்கள் கல்குவாரியின் வெளிமுனை பகுதியில் இருந்து அளந்ததாக தெரிவித்தாலும் அது கல்குவாரியின் மையப்பகுதியில் இருந்து தான் அளந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார். ஏனென்றால் நாங்கள் பல ஆதாரத்தோடு இந்த மாவட்டத்திலேயே கிட்டத்தட்ட 30-க்கும் மேற்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு கொடுத்து உள்ளோம் என்று கூறினார். 356 மீட்டர் தொலைவிற்கு குறைவாக தான் கண்மாய் உள்ளது. இந்த கல்குவாரியானது 60 அடி ஆழம் அதாவது 17 மீட்டர் ஆழத்துக்கு வெட்டி எடுப்பதாக கூறியுள்ளதாக தெரிவித்தார். தினசரி 78 $m^3$ அதாவது 13 லாரி லோடு, ஒரு லாரிக்கு 6 $m^3$ வகிதம் எடுக்கப் போவதாக கூறியுள்ளனர். ஆனால், இவர்கள் காண்பித்துள்ள லாரிகளுக்கு கிட்டதட்ட 20 $m^3$ அளவிற்கு கூட லோடு ஏற்றலாம் ஆனால் சொல்வது 6 $m^3$ லாரியில் 13 லோடு கற்கள் எடுக்கப் போவதாக கூறுகிறார்கள். இந்த இடத்தில் மேலூர் கிராமத்தை சென்று பார்த்தோம் எல்லாம் வயல் பகுதி. இங்கு அரசு எந்த திட்டங்களையும் போட்டு கொடுக்கவில்லை. ஏற்கனவே கடந்த காலத்தில் இந்த நிலத்தை கட்டி ஆண்டவர்கள் மன்னர்கள், மக்கள், என பலரும் உருவாக்கிய குளங்கள் வைத்து பாசனம் செய்து, அருமையான நெல் பயிரிட்டு அறுவடை செய்து

வருவதாகவும் கூறினார். இந்த கல்குவாரி 60 அடி ஆழம் வெட்டப்படும் போது இந்த குளத்தில் தண்ணீர் நிற்குமா? ஒரு சொட்டு நீர் கூட நிற்காது. எல்லாம் கல்குவாரி பள்ளத்திற்கு ஓடிவிடும் என்று கூறினார். இந்த கல்குவாரி புதியதாக அமைக்க போகிற கல்குவாரி. என்றும், ஏற்கனவே உயர்நீதிமன்ற தீர்ப்பு இருக்கிறது கண்மாய், ஏரி, ஏந்தல் போன்ற இடங்களில் இருந்து 500 மீட்டர் தொலைவிற்குள் குவாரி அமையக் கூடாது என்று உயர் நீதிமன்ற தீர்ப்பு உள்ளது. அந்த தீர்ப்பை கூட விட்டுவிடுவோம். நீங்க அரசாங்க விதியை கேட்பீர்கள். Gazzette-ல் கேட்பீர்கள். 300 மீட்டர் தொலைவிற்குள் குளம் இருக்கும் பொழுது குவாரி அமைத்தால் தண்ணீர் எல்லாம் கல்குவாரிக்கு போய்விடும். குளத்தில் ஒரு சொட்டு கூட தண்ணீர் இருக்காது. அப்போ இந்த பகுதி மக்கள் எப்படி பாசனம் செய்வார்கள் என கேள்வி எழுப்பினர். அதாவது நாளை நடக்கப் போவதை சிந்தித்துப் பார்க்காமல் இருப்பதன் விளைவு தான் இன்று சென்னை பகுதியில் பெரு வெள்ளம், மழை பெய்யுற காலத்தில் வெள்ளமும் சரி, தென் மாவட்டங்களில் நடக்ககூடிய நிகழ்வும் சரி, ஏற்கனவே வந்த புதுக்கோட்டை மாவட்டத்தில் பேரழிவு ஏற்படுத்திய கஜா புயலும் சரி. அதாவது நாங்கள் சொல்வது நீங்கள் சொல்கின்ற சட்டம் அந்த சட்டப்படி இல்லாமல் இருக்கிறது என்பது பற்றி தெளிவு படுத்துவதாக தெரிவித்தார். அடுத்ததாக மேற்கு புறத்தில் மேலூர் சாலை இருப்பதாகவும் நான் சொல்லவில்லை நிறுவனம் சொல்லுகிறது. அதை நாங்கள் காட்டுவதற்கான எந்த வருவாய் ஆவணமும் இணையதளத்தில் இல்லை என்றும் நீங்களும் கொடுக்கவில்லை என்று கூறினார். ஆனால், இந்த குறிப்பானையில் கல்குவாரிக்கு மேற்கு புறம் சாலை இருக்கிறது. அதற்கு பத்து மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே நாங்கள் கூறியிருந்தது போல் Artificial road அதாவது செயற்கையாக அமைக்கப்பட்ட தார் சாலை ஏற்கனவே உங்களுடைய கிராம வரைபடத்தில், அ-பதிவேட்டில், புலவரைபடத்தில், வண்டிப்பாதையாக இருந்திருக்கலாம், அது UDR காலத்தில் அப்படி போட்டிருப்பாங்க. ஆனால், அது இன்றைக்கு மாற்றப்பட்டு செயற்கையான தார்சாலையாக போடப்படும் பொழுது அது பொதுச்சாலை என்ற Category-க்குள் வந்துவிடும் என்று கூறினார். அதிலிருந்து 50 மீட்டர் தூரத்தில் தான் கல்குவாரி பணி செய்ய வேண்டும் என்று கூறினார். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை என்பது தான் எதார்த்தம் என்று குறிப்பிட்டார். மற்றொன்று சிறு கனிம சலுகை விதிகள் 1959-பிரிவு 36 தெளிவாக கூறுகிறது உள்ளாட்சி மன்றங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசு துறைகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய முதன்மை பணிகள் இவற்றின் ஏதாவது ஒன்றின் நீரேற்றும் அமைப்புகள் அல்லது நீர் வழங்கும் ஏற்பாடு அதாவது போர்வெல் அல்லது தண்ணீர் தொட்டி 500 மீட்டருக்குள் இருந்தால் குவாரிக்கு அனுமதி

கொடுக்கக் கூடாது என்று சட்டம் கூறுகிறது. ஆனால், இந்த கல்குவாரி அமையக்கூடிய இடத்திலிருந்து 500 மீட்டர்க்குள் அரசின் போர்வெல் தனியார் போர்வெல் அல்ல அரசினுடைய போர்வெல் இருக்கிறது. எனவே, இந்த கல்குவாரிக்கு சட்ட அடிப்படையில் அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்கவும் கூடாது என்று கூறினார். அடுத்ததாக காற்று மாசு ஆய்வு பற்றி கூறினார்கள். நாங்கள் மூன்று மாத காலமாக எட்டு இடங்களில் காற்று மாசு ஆய்வு செய்ததாகவும் எந்த பிரச்சனையும் இல்லை என்றும் கூறினார்கள். இந்தப் பகுதி மக்கள் கூறினார்கள், இங்கு கல்குவாரி இருக்கிறது. கல்குவாரியில் அரசு சொல்லக்கூடிய நாணல் வெடிகளை பயன்படுத்துவது கிடையாது. ஜாக் ஹேமர் வைத்து கம்பரசர் வைத்து 32mm ஒரு இஞ்ச் விட்டம் ஆழம் போட்டு வெடி வைப்பதில்லை. போர் குழி போட்டு வெடி வைக்கிறார்கள் என்று கூறினார். பொட்டு வெடி வைத்தால் அதிர்வுகள் வராது. முறையாக மணல் மூட்டைகள் அடுக்கி, தார்பாய் போட்டு லாரி டயரை பொட்டு வெடி வைத்தால், நாணல் வெடிகளை பயன்படுத்தினால் அதிர்வுகள் வராது ஆனால், இவர்கள் போர் குழி போட்டு வெடி வைக்கிறார்கள் வீடெல்லாம் ஆடி போய்விடுகிறது. எல்லா வீடும் விரிசல் விட்டுள்ளது போய் பார்த்தோம் என்று கூறினார். சட்டம் என்ன கூறுகிறது, கல்குவாரி காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை தான் இயங்க வேண்டும் ஆனால் எந்த குவாரியும் அப்படி இயங்குவதில்லை என்றும், அதேபோல் வெடி வைப்பது மதியம் உணவு இடைவேளை ஒரு மணி முதல் இரண்டு மணி வரைக்கும் தான் வைக்க வேண்டும் இதை நாங்கள் மட்டும் கூறவில்லை இவர்களுடைய அறிக்கையும் தான் சொல்கிறது. ஆனால் இவர்கள் அவ்வாறு செய்வதில்லை என்று கூறினார். அதேபோல் நாணல் வெடி தான் பயன்படுத்த வேண்டும். ஆனால் இவர்கள் சட்ட விரோதமாக வெடி மருந்து வைக்கிறார்கள் என்றும் ஜாக் ஹேமர் வைத்து 32mm ஒரு இன்ச் diameter ஆழம்தான் வைக்க வேண்டும் ஆனால் இங்கே போர் குழி போடுகிறார்கள் என்று கூறினார். இத்தனை சட்ட விதி மீறல்கள் உள்ளன என்று கூறினார். நாங்கள் கடந்த மாதம் திருப்பூர் மாவட்ட ஆட்சியரிடம் கேட்டோம். ஐயா, சட்டவிரோதமாக வெடிமருந்துகள் வந்து கொண்டு இருக்கிறது. நீங்கள் ஒரு 3000 கிலோ கைப்பற்றி உள்ளீர்கள் அதேபோன்று பல்லடம் அருகில் இயங்கி முடித்த கல்குவாரியில் வெடி மருந்து இருப்பு வைத்து வெடித்து சூலூர் ஏர்போர்ட் வரை 2.5கி.மீ பாதிப்பு ஏற்பட்டதாகவும் வெடிமருந்து பற்றி நடவடிக்கை எடுக்க யார் பொறுப்பு என கேட்கும் பொழுது யாரை கேட்டாலும் பொறுப்பு இல்லை என்று கூறுகிறார்கள். மாவட்ட துணை கண்காணிப்பாளரை கேட்டால் நான் பொறுப்பில்லை என்று சொல்கிறார். அப்படியென்றால் யார் தான் பொறுப்பு என கேட்டவுடனே பதில் சொல்லாமல் எழுந்து சென்று விட்டார். அதன் பின்பு நாங்களே தேடி பிடித்து இந்த சட்டவிரோத வெடி

வைத்தால், சட்ட விரோத வெடி மருந்தை கொண்டு வந்தால் வருவாய் துறை தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். குவாரியில் நாணல் வெடி வைத்தால் ஒரு வெடிக்கும் இன்னொரு வெடிக்கும் 28 நொடிகள் இடைவெளி விட வேண்டும் serial blasting என்பார்கள் பட்டாசு மாறி வெடிக்க முடியாது. நாணல் வெடி வெடித்தால் டுப் என்றும் அடுத்த 28 செகண்ட் அப்புறம் டுப் என்ற சத்தம் கேட்கும். ஆனால், டுமீல் என்று சத்தம் கேட்டால் அது சட்ட விரோத வெடி என்று கூறினார். அதுபோன்று வெடி மருந்து பயன்படுத்தினால் Executive Mgistrate என்று சொல்லக் கூடிய வருவாய் வட்டாட்சியர் முதல் மாவட்ட ஆட்சித் தலைவர் வரை என அனைவரும் நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறினார். அதேபோன்று காவல்துறையில் உதவி ஆய்வாளர் முதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வரையில் அனைவரும் நடவடிக்கை எடுக்கலாம் என்று உத்தரவை நாங்கள் பெற்று தந்துள்ளோம். அதனால் தயவுசெய்து வெடி சத்தம் என்ற ஒன்று வந்தாலே நீங்க வருவாய் கோட்டாச்சியரிடம் புகார் செய்யலாம் அவர்கள் வந்து நடவடிக்கை எடுப்பார்கள். சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரி அவர்களிடமே ஆதாரத்தோடு நீங்கள் தரலாம். நாங்களும் அந்த அரசாணையை உங்களுக்கு தருகிறேன் என்று வருவாய் கோட்டச்சியரிடம் கூறினார். அடுத்தபடியாக இங்கு சொன்னார்கள் இந்த குவாரிகள் இயங்குவதால் இந்த பஞ்சாயத்திற்கு 5 கோடி ரூபாய் வருவாய் வருவதாக நம்முடைய அருமை செயல்பாட்டாளர் கூறினார். 5 கோடி ரூபாய் வருமானம் வருவது நல்ல விஷயம். நல்ல விஷயம் ஏனென்றால் ஒரு கல்குவாரி இயங்கும் போது அந்த கல்குவாரியின் Seigniorage தொகை, 10% கனிம நிதி 2% பசுமை நிதி மற்ற எல்லா நிதிகளும் இருக்கிறது. அதிலிருந்து பஞ்சாயத்துக்கு நிதி கொடுக்கின்றார்கள் எனக் கூறினார். ஆனால், ஒரு லாரி கிராமபுற சாலையில் பத்து டன் அளவில் தான் கற்கள் ஏற்றி செல்ல வேண்டும் என்று நான் சொல்லவில்லை, மரியாதைக்குரிய உச்சநீதிமன்றம் சொல்லி உள்ளது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அடிப்படையில் இந்திய நெடுஞ்சாலைத்துறை மற்றும் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்கள் கூறி நமது போக்குவரத்து துறை ஆணையர் கடந்த 26/7/2023 அன்று கூறியிருந்தார். கிராம சாலைகளில் பத்து டன்னுக்கு அதிகமாக லோடு ஏற்றி வந்தால் அது கல் ஏற்றி வந்தாலும் சரி, மண் ஏற்றி வந்தாலும் சரி அதிகப்படியான ஒவ்வொரு லோடுக்கும் முதல் ஒரு டன்னுக்கு 20000 ரூபாய் அபராதமும் அதற்கு அடுத்து வரக்கூடிய டன்களுக்கு 2000 ரூபாய் அபராதமும் வசூலிக்க வேண்டும் என்று கூறினார். ஏனென்றால் இந்த நாட்டின் வருவாயில் 20% மத்திய அரசும் மற்றும் மாநில அரசும் சாலைகளுக்கு தான் பயன்படுத்துகிறதாக கூறினார். கிராமப்புற சாலைகளில் 10 டன் லோடு தான் ஏற்றி டிராக்டர் தான் செல்ல வேண்டும். ஆனால், இங்கே 90 டன் 16 டயர் கொண்ட லாரி

செல்கிறது இதனால் சாலைகள் முழுவதும் பாதித்து விடுகிறது என்று கூறினார். பாதிப்படைவது பஞ்சாயத்து சாலைகள் மட்டும் அல்ல, மாநில நெடுஞ்சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டச் சாலைகள் என அனைத்துமே கூறினார். இங்கு அதிகபட்சம் 16 டயர் கொண்ட லாரி 48 டன் மட்டும் தான், ஆறு டயர் கொண்ட லாரிகள் 24 டன் மட்டும் தான் அவை கிராமச் சாலையில் செல்ல முடியாது. அதேபோல் 10 டயர் கொண்ட லாரி 28 டன் மற்றும் 12 டயர் கொண்ட லாரியில் 36 டன், 16 டயர் லாரி 48 டண் மட்டுமே ஏற்றிக்கொண்டு செல்ல முடியும் என்பது அரசின் விதி. ஆனால், இந்த விதியின் அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்றும் கூறினார். இங்கு நமக்கு கொடுக்கக்கூடிய ஐந்து கோடி பெரிதாக தெரிகிறது ஆனால் ஒரு கிலோ மீட்டர் சாலை அமைக்க ஒரு கோடி ரூபாய் செலவாகும். அதே தேசிய நெடுஞ்சாலை இருந்தால் ஒரு கிலோ மீட்டருக்கு 240 கோடி ரூபாய் வரை செலவு செய்துள்ளார்கள் என்று கூறினார். நமக்கு வரக்கூடியது, கிடைக்ககூடியது, கிள்ளி கொடுக்கக்கூடியது பெரியதாக தெரிகிறது. ஆனால், நம்மிடம் இருந்து இந்த நிறுவனங்கள் அனைத்தும் மக்களிடமிருந்து வரிப் பணத்தை எடுத்துக் கொண்டு சாலைகள் போட்டு அதை பயன்படுத்திக் கொண்டு இருக்கும் அவலம் தான் இருக்கிறது. எட்டு வருடம் இருக்கக்கூடிய சாலைகள் ஒரு வருடத்திலேயே முழுக்க சேதமடைகிறது என்று கூறினார். எனவே, நீங்கள் தயவு செய்து வருவாய்த்துறை மற்றும் RTO என்று சொல்லக்கூடிய வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் காவல்துறை செக்ஷன்-ஏ சொல்கிறார்கள்113, 113/3, 114, 194, Motor Vehicle Act 1988 கூறியிருக்கிறார்கள், பொது சொத்துக்கு சேதாரம் Public Property Damage Act -லும் நடவடிக்கை எடுப்போம் என்று கூறி இருக்கிறார்கள். ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் எந்த நடவடிக்கையும் எடுத்தது இல்லை. இங்கு நூற்றுக்கு மேற்பட்ட கல்குவாரிகள் உள்ளது. ஒரு நடவடிக்கை கூட இதுவரை எடுத்ததில்லை. இதனை நாங்கள் தகவல் அறியும் உரிமை சட்டம் வாயிலாக வாங்கி பார்த்துள்ளோம் என்று கூறினார். அப்போ என்னதான் நடக்கிறது இங்கே, மக்களுடைய வரிப்பணத்தில் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் நடைமுறையில் இதயெல்லாம் இல்லாமல் பல கோடி மக்களுடைய பொதுச்சொத்து ரூபாய் சேதாரமாகி கொண்டு உள்ளதாகவும் அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அடுத்தது, இந்த பகுதி நில அதிர்வு மண்டலம்-II மிக குறைந்த பாதிப்பு பகுதி என்று கூறி இருக்கிறார்கள். ஆனால், இந்த மாவட்டத்துக்கு அருகில் இருக்கக்கூடிய திண்டுக்கல் மாவட்டம் கீரனூர் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு நில அதிர்வு ஏற்பட்டது. இதனை ஒட்டி இருக்கக்கூடிய கரூர் மாவட்டத்தில் 3.5 ரிக்டர் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

இப்போதெல்லாம் கடந்த காலங்களைப் போல் இல்லை, அப்பொழுதே வருடகணக்காக இயற்கை பழிவாங்கி விடுகிறது என்று கூறினார். எனவே, தயவு செய்து இங்கே எல்லாம் 70 மீட்டரில் தண்ணீர் இருக்கிறது. அதனால், கல்குவாரிக்கு 50 மீட்டர் அனுமதி கொடுக்கிறோம் என்று கூறி அநியாயம் செய்ய வேண்டாம் என கேட்டுக்கொண்டார். இந்த வருடம் பள்ளிக்கூடங்களில் 12 நாட்களுக்கு தள்ளி வைத்து பள்ளிக்கூடம் திறக்கிறார்கள் என்றும், ஏனென்றால் இந்த கல்குவாரிகளில் இருந்து வருகின்ற அளவிற்கதிகமான வெப்பத்தினால் தான் 12 நாட்கள் கழித்து பள்ளிகூடம் திறக்கிறார்கள் என்று கூறினார். காலநிலை மாற்றம் மிக உச்சத்தில் போய்க் கொண்டு உள்ளது. எனவே, இதை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அதிகாரிகள் ஆகிய உங்களுக்கு இருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இங்கு உள்ள அனைத்து கல்குவாரிகளிலும் நாணல்வெடிகளை தான் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார். இங்கு எல்லா கல்குவாரிகளிலும் பெஞ்ச் முறையில் தான் இருக்க வேண்டும். பெஞ்ச் முறைனா என்னது, ஐந்து மீட்டர் நீளம், 5 மீட்டர் அகலம், 5 மீட்டர் ஆழம் இப்படி படிப்படியாக தான் இருக்க வேண்டும் என்றும், இங்கு ஏதாவது ஒரு கல்குவாரியாவது படிப்படியாக இருக்கிறதா என்று பார்த்தால் எல்லாம் செங்குத்தாக தான் ஆழமாக உள்ளது என்று கூறினார். பென்ச் முறை கிடையாது, நாணல் வெடி வெடிக்கிறது கிடையாது, சீரியல் பிளாஸ்டிங் முறை கிடையாது, போர்வெடி வைக்கின்றார்கள் இதுபோன்ற சட்ட விரோதமான முறையில் தான் நடந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். இங்கு ஒருவர் கூறினார், எங்களுடைய ஆடு, மாடுகள் எல்லாம் போய் கல்குவாரி குழிகளில் போய் விழுந்து இறந்து விடுகிறது, தயவு செய்து பாதுகாப்பு கொடுங்கள், கம்பி வேலி அமைக்க வேண்டும் என்று கூறினார். இந்த கம்பி வேலி அமைப்பது குறித்து நான் கூறவில்லை. நமது மாண்புமிகு தமிழக முதல்வருக்கு துணையாக இருக்க கூடிய நம்முடைய மாரியாதைக்குரிய தலைமை செயலாளர் அவர்கள், கடந்த ஏழாவது மாதம் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். அந்த உத்தரவின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கும் கல்குவாரிகள், இயங்கி முடித்த கல்குவாரிகள் என எல்லா கல்குவாரிகளும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என உத்தரவு உள்ளது என்று கூறினார். கூட்டத்தில் சிறிது சலசலப்பு ஏற்பட்டு, வருவாய் கோட்டச்சியர் மற்றும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் அவர்களின் அறிவுறுத்தலின் படி கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இது மாவட்ட ஆட்சியர் அழைத்ததன் பெயரில் நாங்கள் கலந்து கொண்டு பேசுகிறோம். இதில் அனைவரும் கருத்தினை சொல்லுங்கள். கருத்து தெரிவிப்பதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு. இதை தவிர நான் வேறு விஷயங்ளை பற்றி கூறினால் நீங்கள் சொல்லுங்கள். இந்த

அறிக்கையில் உள்ளதை பேசி தான் ஆக வேண்டும். உங்களுக்கு இந்த அறிக்கையில் உள்ளதை பற்றி ஒரு விஷயமாவது தெரியுமா என்று கேள்வி எழுப்பினார். கம்பி வேலியை பொருத்தவரை தமிழ்நாட்டின் தலைமை செயலாளர் ஜுலை 27-ல் தெளிவாக அறிக்கை கொடுத்திருக்கிறார். அனைத்து மாவட்டங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்ற இயங்கி முடித்த கல்குவாரிகளில் கம்பி வேலி அமைக்க வேண்டும். அவைகள் அமைத்துள்ளதா இல்லையா என்று ஆகஸ்ட் மாதத்திற்குள் VAO கணக்கீடு செய்து செப்டம்பர் மாதத்திற்குள் எல்லா கல்குவாரியும் கம்பி வேலி அமைக்க வேண்டும் என்று நான் கூறவில்லை அறிக்கை கொடுக்க வேண்டும் என தலைமைச் செயலாளர் கூறியுள்ளார்கள் என்று தெரிவித்தார். இது மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் தெரியும் மாவட்ட ஆட்சியர் மூலமாக பத்திரிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மூன்று மாதம் ஆகிவிட்டது இதுவரையிலும் எந்த கல்குவாரியிலும் அது போன்று கம்பி வேலி அமைக்கப்படவில்லை என்றுகூறினார். எனவே, தயவுசெய்து ஒவ்வொரு கல்குவாரி உரிமையாளர்களும் தொடங்கும் பொழுது இதிலும் கூறியுள்ளார்கள் நாங்கள் குவாரி தொடங்கும் முன்பு குவாரியை சுற்றி முழுவதும் கம்பி வேலி ஒரு மீட்டருக்கு 300 ரூபாய் செலவு செய்து அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்கள் என தெரிவித்தார். ஆனால், எங்கேயாவது அமைத்து இருக்கிறார்களா? கிடையாது என்று குறிப்பிட்டார். அதை நடைமுறை படுத்துங்கள். சட்டத்தில் சர்க்கரை என்று எழுதினால் இனிக்காது என்றும், இங்கு எத்தனை பேர் குழிக்குள் விழுந்து இறந்து போய்விட்டார்கள். எத்தனை ஆடு மாடுகள் குழிக்குள் விழுந்து இறந்துள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் இந்த வருடம் 2023-ல் கல்குவாரிக்குள் விழுந்து இறந்தவர்களின் எண்ணிக்கை 85. துப்பாக்கி எடுத்து சுட்டா தான் படுகொலை அல்ல அவரவர்கள் சொந்த பொறுப்பில் செய்யவில்லை என்றாலும் படுகொலை தான் என்று கூறினார். 85 பேர் படுகொலையானதால் தான் தலைமைச் செயலாளர் உத்தரவு பிறப்பித்தார். ஆனால் மேலூர் கிராமத்தில் அவ்வாறு இல்லை. அதை நடைமுறை படுத்துங்கள். அடுத்தாக இயங்கி முடித்த கல்குவாரிகள் இங்கே சொல்கிறார்கள் நாங்கள் கல்குவாரி இயக்குவோம் 17 மீட்டர் கல்லெடுப்போம் அதன் பிறகு அந்தக் கல்குவாரி பள்ளம் தண்ணீர் தேக்கி வைக்கின்ற இடமாக என்னவாக மாறும் என்றால் அது ஒரு ஏரி மாதிரி, கிணறு மாதிரி, தண்ணீர் தேக்கி வைக்கும் இடமாக மாறும் என்று கூறினார். ஆனால், இங்கு நாங்கள் பார்த்த அனுமதி முடித்த கல்குவாரிகளில் இருந்து தண்ணீர் சட்டவிரோதமாக கிரஷருக்கும், எம்சாண்டுக்கும் எடுத்துச் செல்கிறார்கள் என்று கூறினார். யார் இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது என்று கேள்வி எழுப்பினர். சொல்பவர்களை சொல்ல சொல்லுங்கள், இந்த பக்கத்தில் இருக்கிற குவாரிகளில் இல்லை என்று, நாங்கள் படத்தை கொடுக்கிறோம்.

குவாரிகளில் இருந்து தண்ணீர் எடுக்க வேண்டும் என்று கூறுவதற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறினார். ஆனால் இங்கே சட்ட விரோதமாக நடந்து கொண்டு இருப்பதாகவும் கூறினார். புதுக்கோட்டை மாவட்டத்தில் நீதிமன்றம் மூலமாக அனைத்து குவாரிகளையும் நிறுத்தி வைத்தார்கள். மறுபடியும் ஒரு குவாரியை மட்டும் நிறுத்தி விட்டு மற்ற அனைத்து குவாரிகளையும் இயக்கக் கூறினார்கள் என்று தெரிவித்தார். நாங்கள் சொல்லுவது சட்டப்படி செய்தால் நான் பேசுவதற்கு என்ன உள்ளது. ஆரோக்கியராஜ் குவாரி வாழ்க, சட்டப்படி எதுவும் கூற முடியாது என்றும், சட்ட விதிகளை மீறி இருப்பதனால் தான் சொல்வதாக என்றும் கூறினார். எனவே இவை அனைத்தையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு தயவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதே போன்று கல்குவாரியில் வேலை பார்க்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் PF,காப்பீடு, ESI எதுவுமே கிடையாது. கல்குவாரியில் விழுந்து இறந்தால் இழப்பீடு என்பது குவாரி உரிமையாளர் ஏதேனும் பணம் கொடுத்தால் தான் உண்டு. அதற்கு பெயர் பிச்சை என்பது தான். சட்டப்படி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய எதுவும் கல்குவாரி தொழிலாளர்களுக்கு கிடைப்பதில்லை என்று கூறினார். இவர்கள் இதனை சொல்லி மட்டும் வைத்திருப்பதாகவும் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அதேபோல் இங்கு தொல்லியல் சின்னம் 1.9 மீட்டர் தொலைவில் உள்ளது. அதேபோல் குடுமியான்மலை அருகாமையில் தொல்லியல் சின்னங்கள் 300 மீட்டரில் இருந்து 500 மீட்டர் ஆகவும் அரசாணை கொடுத்தார்கள். 500 மீட்டர் இருந்தாலும் கூட தொல்லியல் சின்னங்கள் என்பது வரலாற்றில் உருவாக்க முடியாது. எனவே, குடுமியான் மலை ஒட்டி சுற்றி ஒரு கிலோ மீட்டர் தள்ளி இருந்த அனைத்தையும் முடிவெடுத்து நிறுத்தியுள்ளனர். தயவு செய்து தொல்லியல் சின்னங்கள் என்பது இரண்டு, மூன்று வகையாக உள்ளது. குறிப்பாக சமணர் படுக்கைகள், மலைகளுக்குள் உள்ள குகை படுகைகள் இவை அனைத்தும் வரலாற்றில் மிக முக்கியம் என்று கூறினார். 300 ஆண்டுகள் வரலாறு கொண்டது அமெரிக்கா. அந்த 300 ஆண்டு கொண்டதையே மிகப்பெரியதாக பேசிக்கொண்டு உள்ளார்கள். ஆனால் பல்லாயிரம் ஆண்டுகள் கொண்ட பல படுகைகள், பல தொல்லியல் சின்னங்கள் நமது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளன என்றும், அவைகள் எல்லாம் மனிதனால் என்ன விரும்பினாலும் உருவாக்க முடியாது என்றும், அவை அனைத்தையும் பாதுகாக்கும் பணியை அதிகாரிகள் செய்ய வேண்டும் என்று கேட்டு கொண்டார். இங்கு உள்ளவர்கள் என்னிடம் கேள்வி எழுப்பலாம். ஆற்று மணலும் வேண்டாம் என்று கூறுகிறீர்கள், எம்-சாண்ட் வேண்டாம் என்று கூறுகிறீர்கள் என்னதான் செய்வது என்று கேட்டால், இதில் 2017 இன்று தமிழக முதல்வர் அவர்கள்

எங்களுடைய கருத்தைக் கேட்டுக் கொண்டு 2017 நவம்பரில் அவருடைய முகநூல் பக்கத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியிருக்கிறார். என்ன எழுதியிருக்கிறார் என்றால் தமிழகத்தின் மணல் தேவைக்கு வெளிநாடுகளில் இருந்து இயற்கை ஆற்று மணலை இறக்குமதி செய்ய வேண்டும். அதை நடைமுறைப்படுத்துங்கள். இங்குள்ள எம் சாண்ட் டன் 4000 ரூபாய் என்றால், அங்குள்ள இயற்கை ஆற்று மணல் டன் ஆயிரம் ரூபாய்க்கு இறக்குவதற்கு இந்தோனேஷியா, மலேசியா போன்ற நாடுகளில் இருந்து வாய்ப்புள்ளது. இங்கு ஆறுகளை அழித்து விட்டார்கள். நிலங்களையும் அழித்து மிகப்பெரிய பாதிப்பு உள்ளாகி உள்ளது என்று தெரிவித்தார். இங்கு தொழிலாளர் வாழ்க்கை என்று சொன்னார்கள் ஆனால், 27 தொழிலாளிகளுக்கு வேலை வழங்குவதாக கூறி இருக்கிறார்கள். அதில் வெடி வைப்பதற்கு ராஞ்சில போய் படித்து வந்த பிளாஸ்டர் மேனேஜர் கம்பரசர் இயக்குவதற்கு இரண்டு பேருக்கு வேலை கொடுப்பதாகவும், ஜாக் ஹேமர் இயக்குவது மட்டும் உள்ளூர் தொழிலாளிகள். ஆனால், இவர்கள் வைப்பது போர்குழி, அடுத்ததாக பிரேக்கர், மஸ்தூர் 4, 5 பேர் தான் சொல்கிறார்கள். இவர்கள் சொல்வதை வைத்து கணக்கீடு செய்து பார்த்தால் அதிகமாக உள்ளுர் மக்களை விட வெளி மாநில மக்களை தான் அதிகமாக வேலைக்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். எனவே இது போன்ற சூழ்நிலையில் இருப்பதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார். கல்குவாரி என்பது தேவை தான். இந்த நாட்டினுடைய கட்டுமானத் தேவைகளுக்கும், சாலையில் போடுவதற்கும் தேவை தான் என்று கூறினார். ஆனால் வரைமுறையற்று எடுக்கும்போது அதனால் ஏற்படும் பாதிப்பை நாளைக்கு ஒரு நில அதிர்வு ஏற்பட்டால் மேலூர் கிராமம் இருக்காது, கோயில் இருக்காது இங்கு இருக்கிற சின்னம் இருக்காது என்று கூறினார். பின்பு பேசிவிட்டு போகலாம், சென்னையில் வெள்ளம் வந்த மாதிரி ஐயோ இதை பண்ணிட்டாங்களே என்று கூறினார். நான் என்னுடைய கருத்தாக கூறுவது இந்த ஆரோக்கிய ராஜ் கல்குவாரி புதிதாக அமைய உள்ளது. அவர்களுடைய புல வரைபடத்தில் காண்பித்துள்ளதை பார்த்தால் அதில் அங்குள்ள மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டு மண் அள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் கொடுத்த கூகுள் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அங்கு மரங்கள் இருக்கிறது நான்கு ஏக்கரில் அரை ஏக்கர் கூட இல்லை என்றும் கூறினார். புதிதாக கல்குவாரி அமைப்பதாக கூறுகின்றனர். ஆனால், மற்றவை எல்லாம் மண் அள்ளப்பட்ட படம் கூகுள் வரைபடத்தில் உள்ளதாக கூறினார். அனுமதி கொடுப்பதற்கு முன்பாகவே சட்டவிரோதமாக மண் அள்ளப்பட்டு உள்ளதாக கூறினார். மதிப்பிற்குரிய இன்றைய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சும்மா பொய்யாக அவர் ஒரு கல்குவாரிக்கு வெடி வைக்க சொன்னதாக கூறி 2012 ஆம் ஆண்டு அவர் இரண்டு மாதம் திருச்சி சிறையில்

இருந்தார். அவருடன் நானும் இருந்தேன் என்று கூறினார். ஆனால் இங்கே சட்டபூர்வமாக அனுமதி இல்லாமல் இவ்வளவு மண் அள்ளி உள்ளவர்கள் என்று கூறினார். இவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என்று கேள்வி எழுப்பினார். ஒரு விவசாயி தன் வீட்டில் மேடை போட அவருடைய இடத்தில் இருந்து மண்ணெடுத்து வந்தால் அதற்கு அவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்கிறார்கள். ஆனால் இங்கு இந்த ஆரோக்கியராஜ் கல்குவாரி இப்பொழுது தான் அனுமதியே கேட்கிறார்கள் முழுக்க virgin குவாரி. அதாவது நாங்கள் இப்பொழுது தான் இயக்க தொடங்குகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், இங்கு மண்ணை சட்டவிரோதமாக பல கோடி ரூபாய் மதிப்புள்ள மண்ணை எடுத்திருப்பதாகவும் அரசிற்கு வரி ஏதும் செலுத்தாமல், வெட்டி எடுத்துள்ளதாக கூறினார். இவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி தனது எதிர்ப்பு கருத்தினை பதிவு செய்தார்.

### 12. திருமதி.சித்ரா, மருதாந்தலை:

நான் மருதாந்தலையில் உள்ள கிரசரில் தான் வேலை பார்த்து வருகிறேன். நாங்கள் எல்லாம் கஷ்டத்திற்காக தான் இந்த வேலைக்கு வந்துள்ளோம் என்று தெரிவித்தார். தயவு செய்து எங்களுக்கு இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்

### 13. திருமதி. பழனியாயி, மேலூர்:

10 வருட காலமாக நாங்கள் இந்த தொழிலை நம்பி தான் பிழைத்துக் கொண்டிருக்கிறோம். தயவுசெய்து இந்த வேலையினை நிறுத்த கூடாது எனவும், எங்களது வயிற்றுப் பிழைப்பிற்கு வேறு வழி இல்லாமல் இருப்பதாகவும் தெரிவித்தார். பத்து வருட காலமாக வேலை பார்த்தவர்களை நிறுத்தி விடாதீர்கள் என்றும் தயவு செய்து அந்த வேலையை பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கேட்டுக் கொள்வதாக கூறி தனது ஆதரவு கருத்தினை பதிவு செய்தார்.

### 14. திரு. S. K. ராஜு, உதவி ஆய்வாளர் (பணி ஓய்வு), மேலூர்:

வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன் மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியத்தில் இருந்து வந்திருக்கும் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் மேலூர் கிராமத்தைச் சேர்ந்தவன். காவல் துறையில் இருந்து ஓய்வு பெற்று இருப்பதாக தெரிவித்தார். 1961-ஆம் ஆண்டு தனது தாத்தா கிரையம் பெற்ற நிலத்தில்

மோசடியாக பட்டா பெற்று அந்த இடத்தில் கனிமம் எடுப்பதற்காக அனுமதி பெற்று, அந்த இடத்தில் கனிமம் எடுக்காமல் வருவாய் கோட்டாட்சியர் இலுப்பூர் அவர்கள் அந்த இடத்தினை பார்வையிட்டு இந்த இடமில்லை உங்களது இடம் 207/13A-ல் வைக்கப்பட்டுள்ளது அந்த 13A-ல் 1.23 ஏர்ஸ் மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என உத்தரவிட்ட இடத்தை தடை மனு கொடுத்திருந்தும் சிலர் வேறு யாருமில்லை இந்த ஊரைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் என்பவர் முறைகேடாக ஆவணத்தை பெற்று அந்த இடம் எந்த ஒரு அனுமதியும் இன்றி 0.5 ஏக்கரில் கனிமம் எடுத்துள்ளதாக தெரிவித்தார். இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் சலசலப்பு மற்றும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் அவரை பார்த்து தங்களுடைய கருத்துகள் இந்த கல்குவாரிக்கு சம்பந்தமில்லாத காரணத்தால் தங்களுடைய கருத்தை அடுத்து நடக்க இருக்கும் கல்குவாரியின் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பின்பு, கூட்டத்தில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது. வருவாய் கோட்டாட்சியர் இலுப்பூர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் காவல்துறையினரை வரவழைத்து அமைதி காக்குமாறு கேட்டுக் கொண்டார். காவல் துறையினர் வந்து சமாதானப்படுத்தினர். பின்பு கூட்டத்தில் அமைதி நிலவியது.

**வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர்:**

அதற்கு பின்பு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பொதுமக்கள் யாரேனும் கருத்து சொல்வதாக இருந்தால் தெரிவிக்கலாம் என்று கூறினார். பின்பு பொதுமக்கள் யாரும் கருத்து தெரிவிக்க முன்வராததால் கூட்டத்தினை முடித்து வைப்பதாக தெரிவித்தார்.

**நன்றியுரை:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எழுத்துவடிவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலோ அல்லது தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் புதுக்கோட்டை அலுவலகத்திலோ சமர்பிக்கலாம் என்று தெரிவித்துக் கொண்டார். தி/எ. R. ஆரோக்கிய ராஜ் உடைகல் மற்றும் கிராவல் குவாரி பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திய வருவாய் கோட்டாட்சியர், இலுப்பூர் அவர்களுக்கு நன்றி கூறினார். இதர வருவாய் துறை அதிகாரிகள், தி/எ. R. ஆரோக்கிய ராஜ் உடைகல் மற்றும் கிராவல்

குவாரி நிறுவன உரிமையாளர், திட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியினை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்துக்கொண்டார்.

கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**இணைப்பு:**

1. கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு (அ).
2. திட்ட பிரதிநிதிகளின் நிழற்பட விளக்க உரை (ஆ)
3. கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்த வீடியோ குறுந்தகடுகள் (இ).
4. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு வரைவு விரிவான அறிக்கை மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் திட்ட சுருக்க உரைகள் (ஈ).
5. எழுத்து வடிவில் பெறப்பட்ட பொதுமக்களின் கருத்துக்கள்(உ) - 10 எண்ணிக்கை

29/12/23

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
புதுக்கோட்டை.

வருவாய் கோட்டாட்சியர்,
இலுப்பூர்